# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். NC 1030/விசாரணை/E/2022 (SA 1781/E/2021)**

திரு.R.பத்மநாபன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/உதவி ஆணையர்-2,
வருவாய் நிர்வாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5. .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது ஏற்கனவே இவ்வாணையத்தால் 07.02.2022 மற்றும் 07.08.2025 ஆகிய தேதிகளில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாணையத்தின் 07.08.2025 தேதியிட்ட உத்தரவின் அடிப்படையில், சென்னை-5, வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரக பொதுத் தகவல் அலுவலர்/உதவி ஆணையர்-2, ஆணையத்தில்27.10.2025 அன்று நேரில் ஆஜராகி, தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில், இவ்வாணையத்தால் 12.01.2026 அன்று கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன :-

*4(1). தகவல் வழங்குவதை பொறுத்தமட்டில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

*4(2). இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்காக தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(8)(b)-ன்கீழ் நஷ்டஈடாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்து ஆயிரம் மட்டும்) பொது அதிகார அமைப்பு (ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலகம்) வழங்கி, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த அறிக்கையை இவ்வாணையத்தில் 17.02.2026 அன்று ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு ஊத்தங்கரை வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

2. மேற்குறித்த உத்தரவு பத்தி 4(2) தொடர்பாக, ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் திரு.சகாதேவன் 17.02.2026 அன்று ஆணையத்தில் ஆஜராகி, ஊத்தங்கரை வட்டாசியரின் 14.02.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

3. ஊத்தங்கரை வட்டாட்சியர் 14.02.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, மேல்முறையீட்டாளருக்கு நஷ்டஈடாக ரூ.5,000/-க்கான வங்கி வரைவோலை 14.02.2026 நேரில் வழங்கப்பட்டு, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்துள்ளதாக தெரிவித்து, அவற்றின் நகலை இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

4. ஏற்கனவே இவ்வழக்கினை 12.01.2026 அன்று முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிட்டுள்ள நிலையில், வட்டாட்சியரின் 14.02.2026 தேதியிட்ட அறிக்கையை பதிவு செய்து. இவ்வழக்கில் மேல்நடவடிக்கை ஏதும் தேவையில்லை என இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள் : 06.04.2026**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். NC 1030/விசாரணை/E/2022 (SA 1781/E/2021)**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஊத்தங்கரை-635 207,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஊத்தங்கரை-635 207,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

திரு.R.பத்மநாபன்
பழைய அஞ்சல் அலுவலகத் தெரு,
கல்லாவி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி-635 304.

Copy to: File

RJ/PS 7.4